# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.. 112/2023 தேதி- 25.04.2026

(P.W.1) .ரசல் ராஜ்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என்னுடைய வாகனத்தை காவல் நிலைய வளாகத்திற்குள் எடுத்து சென்றார்களா என்றால் எடுத்து சென்றார்கள். மேற்படி சம்பவத்தை காவல் நிலையத்தில் உள்ள சிசிடிவி கேமரா பதிவை பாதுகாக்கச் சொல்லி உயர் நீதிமன்றத்திற்கோ வேறு எதாவது ஒரு நீதிமன்றத்திலோ காவல் துறை உயர் அதிகாரியிடம் மனு கொடுத்தேனா என்றால் சிசிடிவி கேமரா அங்கு இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. சமானிய மக்களுக்கு கூட சிசிடிவி கேமரா இருக்கும் விபரம் தெரியும் என்றால் காவல் நிலையத்தினுள் சிசிடிவி கேமரா இருக்கும் விபரம் தெரியும் வெளியே இருக்கும் விபரம் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் பிரதிவாதிகள் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் வாகன தணிக்கை செய்தார் என்பதை நிரூபிக்க ஆர்.டி.ஐ. மூலம் நிரூபிக்க நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் நான் பிராதில் குறிப்பிட்டுள்ள இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் வாகன தணிக்கை நடத்தவில்லை அதை நிரூபிக்கும் சுமை என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் என்னை தடுத்து நிறுத்தவில்லை பிரதிவாதிகளுக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சம்பவத்திற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு என்னை தெரியாது ஆனால் சம்பவத்திற்கு பின்பு என்னை தெரியும். என்னுடைய பிராதில் எந்த மருந்து கடைக்கு அல்லது எந்த மருத்துவமனைக்கு மருந்து வாங்க சென்றேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கை இழப்பீடு கேட்கப்பட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக துறை ரீதியாக சேர்த்துள்ளேனா அல்லது தனிப்பட்ட முறையில் சேர்த்துள்ளேனா தனிப்பட்ட முறையில் சேர்த்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2 முதல் 4 பிரதிவாதிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வேறு அதிகாரி அவர்களுக்கு பதிலாக வாங்கியுள்ளார்கள். தனியாக அறிவிப்பு எதுவும் அனுப்பாததாலும் அவர்களுக்கு சார்பு

செய்யப்படாததாலும் 2 முதல் 4 பிரதிவாதிகள் எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் தற்போது அரசு வேலையில் இருப்பதால் அவர்களை கஷ்டப்படுத்தவேண்டும் என்றே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதி தற்போது ஓய்வு பெற்றுவிட்டார், 2 ஆம் பிரதிவாதி பதவி உயர்வு பெற்று துணை கண்காணிப்பாளராக அவர் பணியாற்றி வருகிறார் மற்றும் 4 ஆம் பிரதிவாதி தற்போது உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறாரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது 2 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் பதவி உயர்வு பெறும் நிலையிலும் 3 ஆம் பிரதிவாதி பணி ஓய்வு பெறும் நிலையில் இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. 2 முதல் 4 பிரதிவாதிகள் அடுத்த நிலைக்கு செல்ல இருக்கும் நிலையில் யாரோ ஒருவர் தூண்டி இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தியதால் நான் தான் அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் மேலும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு இழப்பீடு கேட்க எல்லா உரிமையும் உண்டு என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ. 2 இந்த வழக்கை தீர்மானிக்க உதவாது என்றால் சரியல்ல. எந்த முகாந்திரமும் இல்லாத இந்த வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.